# புலிகளின் பதில் கிடைத்ததும் 4ம் கட்ட பேச்சு நடைபெறும்

விலை ரூபா 5-00

ஈழநாடு

EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 36 திருவள்ளுவர் ஆண்டு 2026 தை 13 இதழ் 357
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 27-1-1995

(கொழும்பு)
விடுதலைப்புலிகள் அரசுப் பிரதிநிதிகளுக்கிடையிலான நான்காவது சுற்று பேச்சு வார்த்தை நடாத்துவதற

(4-ம் பக்கம் பார்க்க)

## இணக்கம் காண்பது சாதாரண விடயமல்ல

(கொழும்பு)
நீண்டகாலமாக எதிர் எதிராக செயற்பட்ட சக்திகளிடையே இணக்கப்பாட்டை கொண்டுவருவது என்பது

4-ம் பக்கம் பார்க்க

## ஏமாற்றும் நோக்கம் அரசுக்கு இல்லை

(கொழும்பு)
''விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்கும் இடையில் நடைபெறும் சமாதான பேச்சு வார்த்தை மூலம் எவரையும்

(4ம் பக்கம் பார்க்க

### ★ போர் இடைநிறுத்த சூழலை பயன்படுத்தி

# தமிழ்க்குழு உறுப்பினர்களை சரணடைய புலிகள் கோரிக்கை!

[யாழ்ப்பாணம்]

தமிழ்க் குழுக்களின் உறுப்பினர்களை தம்மிடம் சரணடையுமாறு தமிழீழ விடுதலைப்புலிகள் பகிரங்க வேண்டுகோள் விடுப்பதாக விடுதலைப்புலிகள் இயக்கப் பிரமுகர் திரு. பொற்கோ நேற்று யாழ். நகரில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

இப்பத்திரிகையாளர் மாநாட்டில் அவர் மேலும் தெரிவித்துள்ளாவது: தமிழ்க் குழுக்களின் உறுப்பினர்களுக்கு ஒரு வேண்டுகோள், மக்களின் விடிவுக்காக போராடிவரும் நாம் ஏனைய தமிழ்குழுக்களில் இருக்கும் இளைஞர்களை சரணடையுமாறு கூறி வந்திருக்கிறோம். அதேபோல்தற்பொழுதும் பகிரங்கமாக அவர்களுக்கு வேண்டுகோள் விடுக்கிறோம்

தற்போது அமுலில் உள்ள போர் இடை நிறுத்தசூழலை கவனத்தில் எடுத்து எம்மிடம் சரணடையுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

போர் நடைபெற்றுக் கொண்டிருந்த காலங்களில் எம்மிடம் சரணடைந்தவர்கள் தம்மை எதிரியென நினைத்து நாங்கள் தாக்குதல் நடத்

(4ம் பக்கம் பார்க்க)

## புளொட் உறுப்பினர் இருவர் வவுனியாவில்புலிகளிடம்சரண்



திலகர் ரஞ்சன்
(யாழ்ப்பாணம்)

புளொட் அமைப்பைச் சேர்ந்த இரு உறுப்பினர்கள் கொண்டு வந்த ரி-81-1 ரக கடந்த 8ம் திகதி வவுனியாவில் விடுதலைப்புலிகளிடம் ஆயுதங்களுடன் சரணடைந்துள்ளனர்.

புளொட் அமைப்பில் விருப்பமின்றி வலுக்கட்டாயமாக சேர்க்கப்பட்ட இவர்கள் இருவரும் புளொட் முகாமிலிருந்து ஆயுதங்களுடன் தப்பி வந்து விடுதலைப்புலிகளிடம் சரணடைந்துள்ளனர் மட்டக்களப்பு மண்டூரை சேர்ந்த திலகர் ரஞ்சன் (இயக்கப் பெயர் நந்தீஸ்-வயது 22) என்பவரும் திருகோணமலை கிளிவெட்டியை சேர்ந்த இரட்ணசிங்கம் ரவீந்திரராஜா (இயக்கப்பெயர் சந்திரன்- வயது 18) ஆகிய இருவருமே சரணடைந்தவர்களாவர்.

இவர்கள் தம்முடன்



இரட்ணசிங்கம்
ரவீந்திரராஜா

துப்பாக்கிகள், இரண்டுரவைக்

(4-ம் பக்கம் பார்க்க)

## யுத்தநிறுத்தத்தைகுழப்பவே புளொட் அமைப்பு விருப்பம்

### சரணடைந்த இளைஞர்கள் தகவல்

(யாழ்ப்பாணம்)

அரசுக்கும் - விடுதலைப்புலிகளுக்குமிடையிலான சமாதானப் பேச்சுக்களை யுத்தநிறுத்தத்தை குழப்பவே புளொட் அமைப்பினர் விரும்புகிறார்கள்: அதற்கேற்ப அதன் உறுப்பினர்களை செயற்படுமாறு தூண்டி வருகிறார்கள்.

இவ்வாறு கடந்த 6ம் திகதி புளொட் அமைப்பிலிருந்து தப்பி வந்து வவுனியாவில் புலிகளிடம் சரணடைந்த இரு இளைஞர்கள் தெரிவித்தனர்.

(2ம் பக்கம் பார்க்க)

தமிழீழ பொதுக்கல்வி தேர்வு:

## 70 மாணவர்கள் தலைவரின் பாராட்டு பெறுகின்றனர்

(யாழ்ப்பாணம்)

தமிழீழப் பொதுக்கல்வித் தேர்வில் தேசிய மட்டத்தில் முதல் பத்து இடங்களையும், கல்விக்கோட்ட மட்டங்களில் முதல் இரு இடங்களையும் பெறும் 70 மாணவர்கள் தமிழீழத் தேசியத் தலைவரின் பாராட்டிதழ்களையும், 5000 ரூபா காசுப் பரிசுகளையும் பெறுகின்றனர்.

தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேரவை தான் நடத்திய தமிழீழ முதனிலைத் தேர்வு, தமிழீழ இளநிலைத் தேர்வு, ஆகிய இரு தேர்வுகளிலும் தேசிய மட்டத்தில் முதல்

(4ம் பக்கம் பார்க்க]

## கிளாலி-பூநகரி படகுசேவை

(யாழ்ப்பாணம்)

கிளாலிபூநகரிபடகுச்சேவை இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு நடைபெறும் என விடுதலைப் புலிகளின் அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர்.

இந்திய குடியரசு தினத்தில்

## குண்டு வெடிப்பு ஏழு பேர் பலி

[புதுடில்லி[

இந்தியாவின் 46வது குடியரசுதினம் நேற்று கொண்டாடப்பட்டபோது ஜம்மு காஷ்மீரில் மூன்று குண்டுகள் அடுத்தடுத்து வெடித்ததில் ஏழு பேர் பலியாகினர். 60 க்கு

(4ம் பக்கம் பார்க்க)

## பலர் சரணடைய போவதாக அறிவிப்பு

[யாழ்ப்பாணம்]

தமிழீழ விடுதலைப் புலிகளிடம் சரணடைவதற்கு ஏனைய தமிழ்க்குழுக்களின் பல உறுப்பினர்கள் தயாராக இருப்பதாக கடிதம் மூலமும் மக்கள் மூலமும் அறிவித்துள்ளனர்

அவர்கள் தாங்கள் சரணடைவதற்கு ஏற்ற இடங்களை ஒழுங்குபடுத்தி தருமாறும் இந்த உறுப்பினர்கள் விடுதலைப்புலிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(4ம் பக்கம் பார்க்க)

## சரணடைபவர்களுக்கு வேலைவாய்ப்பு பாதுகாப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப் புலிகளிடம் சரண்டையும் தமிழ்க் குழுக்களின் உறுப்பினர்களுக்கு வேலைவாய்ப்பு மற்றும் பாதுகாப்பு வசதிகளும் செய்து கொடுக்கப்படும் என்று நேற்றைய பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவிக்கப்பட்டது.

சரணடையும் உறுப்பினர் விரும்பும் ஒழுங்குகளும் செய்து கொடுக்கப்படும் இவர்கள் தமது பெற்றோர்களுடன் வாழ்வதற்கும் ஏற்

(4-ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்


### தொழில் நுட்ப முறையிலான சிரட்டைக்கரி

இலகுவாக சேதமின்றி சிரட்டைக்கரியை உற்பத்தி செய்ய நவீன தொழில் நுட்ப அமைப்புக்களைப் பெற இன்றே நாடுங்கள். சக்திப் பகுதி, முதன்மைச் செயலகம், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம், தாவடி.

(ஏ-4750)

### வைத்தியம்

செங்கண்மாரி (Hepatit s) இரப்பை அல்சர், ஆஸ்மா மூட்டுவாதரோகங்கள் வலிப்பு நோய், பீநிசம், தலையிடி, தலை காலவியல், சருமநோய்கள், மாதவிடாய்குத்து, இரத்தப்போக்கு, வெள்ளைக் கசிவு, கருவழிதல், மகப்பேறின்மை, வீரியக்குறைவு, மூலவியாதிகள், மூத்திர ரோகங்களில் பிரபலமானவர். சகல வியாதிகளையும் குணப்படுத்துவார். வேலணை வைத்திய கலாநிதி சி. இராசரத்தினம் 121, 2ம் குறுக்கு வீதி, பறங்கித்தெரு, யாழ்ப்பாணம். (சி-1373)


### அமைதி வேண்டி பிரார்த்தனை

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை சட்டம்பித்துறை ஸ்ரீ விசாகப்பெருமாள் (முருகன்) ஆலயத்தில் பிரதி வெள்ளிக்கிழமைகள் தோறும் மாலை 6 மணி தொடக்கம் நாட்டில் அமைதி சமாதானம் சுபீட்சம் நிலவ இறைஆசி வேண்டி விசேட பூசை வழிபாடுகள், பஜனை கூட்டுப்பிரார்த்தனைகள் நடைபெற்று வருகின்றன.

-154

### வீரவணக்க கூட்டங்கள்

(யாழ்ப்பாணம்)

ஜனவரி மாதத்தில் வீரச்சாவு அடைந்த மாவீரர்களின் வீரவணக்க கூட்டங்கள் வட்ட மட்டங்களில் நடத்தப்படவுள்ளன.

இம் மாதம் 28ம் திகதி பருத்தித்துறை வட்டத்தில் அல்வாய் வடக்கு முத்துமாரி அம்மன் கோயில் முன்றலிலும் சாவகச்சேரி வட்டத்தில் மட்டுவில் வளர்மதி சனசமூக நிலைய கலையரங்கிலும், யாழ். வட்டம் 29ம் திகதி நரிக்குண்டடி றக்கா றேட்டிலும் கோப்பாய் வட்டம் 30ம் திகதி புத்தூர் சோமஸ்கந்த கல்லூரியிலும் நடைபெறவுள்ளன-

-ரி

# யுத்தநிறுத்தத்தைகுழப்பவே

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தப்பிவந்து சரணடைந்த திருகோணமலை கிளிவெட்டியைச் சேர்ந்த இரத்தினசிங்கம் ரவீந்திரராசா இதுபற்றி மேலும் கூறுகையில்;

1994ம் ஆண்டு புளொட் இயக்கத்தில் அவர்களின் பலத்த வற்புறுத்தலாலும் பயமுறுத்தலாலும் சேர்ந்து கொண்டேன். அவ்வேளையில எனது வறிய குடும்பத்தின் உழைப்பாளியாகவே நானிருந்தேன். வீட்டாருக்குபணம் தருவதாகவும் உதவிகள் செய்வதாகவும் கூறியே என்னை இயக்கத்தில் சேர வைத்தார்கள். பின் அது பொய் என்பதை தெரிந்து கொண்டேன்.

இயக்கத்தில் சேர்ந்த 15 நாட்களில் துப்பாக்கிகளை எப்படிக் கையாள்வது என்ற பயிற்சி அளித்தார்கள். பின் அவர்கள் செய்யும் அன்றாட வேலைகளில் எம்மையும் ஈடுபடுத்தினர். புளொட் முகாமினூடாகச் செல்லும் பொது மக்கள், பயணிகள், வியாபாரிகளைப் பிடித்து அடித்து துன்புறுத்தி பணம் பறிப்பார்கள். பணம் இல்லை என்றால் அடி, உதை குத்துடன் சிலரை வெட்டியுமுள்ளனர்.

இயக்கத் தலைவர்கள் எல்லோரும் சொகுசாக இருக்கும் போது நாம் பங்கர் வெட்டுதல், சென்றியில் நிற்றல், சமையல் வேலை செய்தல், இயக்கத் தலைவர்கள், பொறுப்பாளர்களின் உடுப்புகளைத் தோய்த்தல், அவாகள் குளிப்பதற்கு தண்ணீர் இறைத்தல் உட்பட எடுபிடிகளாகவும் கூலி வேலைக்காரர்களாகவும் கூலி வேலைக்காரர்கள் போன்றுமே நடாத்தப்பட்டோம்.

அப்பாவி மக்களைப் பிடித்து வந்து அவர்களைக் கொடுமைப் படுத்துவார்கள். வறியவர்களை பணம் தருமாறு கேட்டு அடித்துக் கொடுமைப்படுத்துவதுடன் சிலரை வெட்டிக் கொன்றுமுள்ளனர். பலரைக் கடத்திச் சென்றுள்ளனர். இதுபற்றி பின்னர் அங்குள்ள ஏனையோர் கதைப்பதைக் கொண்டு அறிந்தோம்.

வவுனியாவில் நகர்ப்பகுதியில் 'லக்கி' என்ற சித்திர வதை முகாம் புளொட்டுக்கு உள்ளது. அங்குதான் பாலியல் வன்முறைகள் உட்பட பல கொடூரச் சம்பவங்கள் இடம் பெறும். இப்படி ஒரு முறை கிராமப்புறம் ஒன்றிற்குச் சென்று இளம்பெண் ஒருவரை பிடித்தபோது அப்பகுயைச் சேர்ந்த பத்து, பதினைந்து பேர் 'சைமன்' என்பவரை மண்வெட்டியால் வெட்டிக் கொலை செய்துள்ளனர்.

வவுனியாவில் மட்டுமே நானிருந்தேன். அங்கு பத்திற்கும் மேற்பட்டவர்களை வெட்டியும், குத்தியும் கொலை செய்துள்ளனர். பணம்பெறும் நோக்கிலேயே பல அப்பாவிகள் இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளனர்.

திருமலையில் எனது சொந்த இடமான கிளிவெட்டியைச் சேர்ந்த 15க்கும் மேற்பட்டவர்களை புளொட் பிடித்துள்ளது எப்படிப் பிடிப்பார்கள் என்றால் - முதலில் எம்மை இராணுவத்தினர் பிடித்து மிக மோசமாகக் கொடுமைப் படுத்துவார்கள். அப்போது இராணுவ முகாம் வரும் புளொட் இயக்கத்தினர் அவர்களிடமிருந்து எம்மை மீட்பது போல் நடித்து எம்மை தமது இயக்கத்தில் வலுக்கட்டாயமாக சேர்ப்பார்கள், சேர மறுப்பவர்களை மீண்டும இராணுவத்திடம் ஒப்படைத்துவிடுவார்கள். எப்படியென்றாலும் ஒன்றில் புளொட்டில் சேர வேண்டும். இல்லாவிடில் இராணுவமுகாமில் அடைபட வேண்டும். எமக்கு வேறு வழியில்லாததால் இவர்களுடன் சேர்ந்தோம்.

வவுனியாவில் நானிருந்த முகாமினுள் 50க்கும் மேற்பட்ட இளைஞர்கள் அங்கிருந்து தப்பி புலிகளிடம் சரணடைய விரும்புகிறார்கள். எனினும் பயத்தால் என்ன செய்வதென்று தெரியாமல் உள்ளனர். புலிகள் எம்மை ஏற்றுக் கொள்வார்கள் என்று தெரிந்தால் பலர் உடனடியாக இங்குவந்து சரணடைய தயாராகவுள்ளனர். அங்குள்ள பலர் விருப்பத்திற்கு மாறாக என்ன செய்வதென்று தெரியாமல் இருக்கிறார்கள்.

எமக்கு வெளித் தொடர்பு எதுவும் தெரியாதவாறு எமது பொறுப்பாளர்கள் பார்த்துக் கொள்வார்க்ள். றேடியோ கேட்கவோ, பேப்பர் படிக்கவோ, பொதுமக்களுடன் கதைக்கவோ விடமாட்டார்கள், காட்டுப்பகுதியில் மக்கள் எவரும் இல்லாத இடங்களி

(3ம் பக்கம் பார்க்க)

### பரிசளிப்பு விழா

[யாழ்ப்பாணம்[

கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி பரிசளிப்புவிழா இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கல்லூரி அதிபர் த. முத்துக்குமாரசாமி தலைமையில் நடைபெறும். இந் நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ். இந்துக் கல்லூரி அதிபர் அ. பஞ்சலிங்கம் கலந்து கொள்கிறார். இ

## இன்று

(கொழும்புத்துறை)

பொன்னாலை ஸ்ரீவரதராஜப் பெருமாள் கோவிலில் இன்று 27-ம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 3 மணிக்கு ஏகாதசி விசேட அபிஷேகம் பூசை ஆராதனைகள் வழிபாடு இடம்பெறும். -154

0 0

(கொழும்புத்துறை)

மணிப்புரி கிராமிய கடல் தொழில் கூட்டுறவு அபிவிருத்திச் சங்கத்தின் பொதுக்கூட்டம் இன்று 27-ம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு சங்கப் பணிமனையில் வலி-கிழக்கு கடல் தொழில் ஒன்றியத் தலைவர் திரு. சி. நவரட்ணம் தலைமையில் நடைபெறும். -154

0 0

(வட்டுக்கோட்டை)

சங்கானை கல்விக்கோட்டப் பாடசாலை அதிபர்களுக்கான விசேட கூட்டம் ஒன்று இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் சித்தன்கேணி கணேச வித்தியாலயத்தில் கோட்டக்கல்விப் பணிப்பாளர் திரு. ப: விக்கினேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

''இரண்டாயிரம் ஆண்டில் உங்கள் பாடசாலை'' என்னும் விடயம் பற்றி விசேட கருத்துரைகள் இடம்பெறவுள்ளன -139

0 0

(யாழ்ப்பாணம்)

சந்நிதியான் ஆசிரம சைவ கலை பண்பாட்டு பேரவையினர் தொண்டமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தில் நடாத்திவரும் வாராந்த நிகழ்வுத் தொடரில் இன்று 27ம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 3-00 மணியளவில் திரு. ஆறு திருமுருகனல்பெரியபுராணத் தொடர் நிகழ்வு இடம்பெறும் அறிமுக உரையை அதிபர் க. அரியரத்தினம் நிகழ்த்துவார்.

-ம


## தொழில்நுட்பகல்லூரி இறுதிப்பரீட்சை - 1994

1994ம் கல்வியாண்டிற்கான தமிழ்/ஆங்கில சுருக்கெழுத்தாளர் தராதரப் பத்திரப் பரீட்சை 1995-01-30-ம்திகதிமு ப 9.00மணிக்கு ஆரம்பமாகும், என பரீட்சை ஆணையாளர் அறிவித்துள்ளார். அன்றைய தினம் காலை 8.00 மணிக்கு சம்பந்தப்பட்ட பகுதித் தலைவரிடம் தமது யாணவ பிரவேச அனுமதிச் சீட்டைச் சமர்ப்பித்து தமது பரீட்சை அனுமதிச்சீட்டைப் பெற்றுக் கொள்ளுமாறு அறியத்தருகிறேன்.

க. ஜெயரத்தினம்
அதிபர்.

தொழிநுட்பக் கல்லூரி,
யாழ்ப்பாணம்.
1995-01-26.

(ஏ 4754)

## பணிநிலை வெற்றிடம்

01. கணக்கு லிகிதர்

★ ஆகக்குறைந்தது க. பொ. த. (உ/த) பரீட்சையில் கணக்கியல் சித்தியெய்தியிருக்க வேண்டும்.

02. களஞ்சியப் பொறுப்பாளர்

★ இரண்டு வருடங்களுக்கு மேல் பொறியியல்துறை சார்ந்த பொருட்களைக் கொண்ட களஞ்சியத்தில் பொறுப்பாளராக கடமையாற்றியிருக்க வேண்டும்.

தகைமை உள்ளவர்கள் பின்வரும் முகவரிக்கு விண்ணப்பிக்கவும்.

விளம்பரதாரர் :
கைத்தொழில் பகுதி,
தமிழீழ பொருண்மிய
மேம்பாட்டு நிறுவனம்,
தாவடி.

(ஏ 4751)

## ஈராண்டு நினைவஞ்சலி

A V

அமரர்
# இ. ச. பேரம்பலம்
[E. S. P]
அவர்கள்

மலர்வு: 26 - 04 - 1926
உதிர்வு: 19 - 01 - 1993

திதி: 27 - 01 - 1995

ஆண்டு இரண்டானதுவோ?
ஈண்டு நீர் எமைப் பிரிந்து
மீண்டு வர மாட்டீரோ? — எந்தலைவா
யாண்டும் எம் நெஞ்சில் நிலைத்திருப்பீர்

வேண்டும் பொழுதெல்லாம் விரும்பி வழி
காட்டும் புண்ணியனாய் கண்ணியனாய்
புனிதனாய்
கூட்டும் அன்புடன் குறைவிலா — ஏந்தலே
மீண்டும் தேடுகிறோம் விரும்பியே வாரீரோ?

ஊழியர்கள் இ. ச. பேரம்பலம் சக நிறுவனம்
நா. கந்தசாமியும்
மற்றும் சக ஊழியர்களும்

இ. ச. பேரம்பலம் அன் கோ,
59, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-1384)

### மணிவாக்கு

பூனைக்கு சிறகு முளைத்தால் உலகில் ஒரு குருவிக்கூட்டைக் கூட மீதி வைக்காது. அற்பனுக்குப் பதவியும் அதிகாரமும் கிடைத்தால் இறுமாப்புள்ளவராக எளியோரைப் துன்புறுத்துவான்.

- மில்லவர்

# நமது நோக்கு

## முதலிட 'விருதா'?

உள்நாட்டுப் பிரச்னை காரணமாக அதிக எண்ணிக்கையில் மக்கள் உயிரிழந்த நாடாக இலங்கை குறிப்பிடப்பட்டுள்ளது; 'விருது' வழங்கப்பட்டிருக்கிறது!

ஐக்கிய நாடுகள் சபையால் வெளியிடப்பட்ட மனித உரிமைகள் சம்பந்தமான அறிக்கையிலேயே இந்த 'நற்சான்றிதழ்' தரப்பட்டிருக்கிறது.

இதனை இங்கு தெரிவித்தவர் யார் எங்கே?

இந்த நாட்டின் ஜனாதிபதியே இந்த நாட்டு மக்களுக்கு எடுத்துக் கூறியிருக்கிறார்.

படையினர் பயிலும் கொத்தலாவலைப் பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழாவின்போதே எடுத்துக்கூறியது பொருத்தமானது; மிகவும் துணிச்சலானது!

ஜனாதிபதியின் இருப்பிடமான அலரிமாளிகையில், வெடிப் பொருள்கள் கண்டுபிடிக்கப்பட்டு, கடமையிலிருந்த படையினர் விசாரணைக்குட்படுத்தப் பட்டிருக்கும் வேளையில், ஜனாதிபதி இதனைக் கூறியதும் கவனிககத்தக்கது.

கடந்த பல ஆண்டுகளாக, படையினரின் செயல்களால் நாட்டின் பொருளாதார அடித்தளமே ஆட்டம் கண்டு விட்டது என்பதை உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பலர் உணரத் தொடங்கிவிட்டனர்.

அதுமட்திரமல்ல - பல இனங்கள் வாழும் நாட்டிலே, ஓரினத்தவரையே அதிகமாகக் கொண்ட படையினரின் செயற்பாடுகள் இனச் சுத்திகரிப்புக்கு வழி செய்கின்றது எனச் சுட்டிக்காட்டிய போதெல்லாம் பலர் தெரிந்தும் தெரியாதவர்கள் போல ஊமையராகி இருந்தனர்.

இன்று - மனித உரிமை மீறலில் முதலிடம் என்ற ரீதியில், சர்வதேச மன்றங்களின் அறிக்கைகள் வெளிவரத் தொடங்கியுள்ளன.

ஜனாதிபதியே இதனைப் படையினர் மத்தியில் எடுத்துக் கூறியது முக்கியத்துவமானது. ஏனெனில் - இன்று - பேச்சுக்களில் மந்தகதி ஏற்படுவதற்கு முக்கிய காரணமே படையினரின் விடாப்பிடியான நிலைப்பாடே!

முன்பு - இங்கு வந்து போன, சீன, அராபிய, ஐரோப்பியப் பயணிகள் பலரும் 'இந்து சமுத்திரத்தின் முத்து' எனப் புகழாரம் சூட்டியதெல்லாம் பழைய கதையாகிவிடும் நிலை உருவாகி வருவது வேதனைக்குரியதே!

# யுத்த நிறுத்தத்தை

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

லேயே எம்மை சென்றிக்கு' விடுவார்கள். எமக்கு மேல் மட்ட விடயம் எதுவுமே தெரியாது. தமது உல்லாச வாழ்க்கைபற்றி எமக்கு எதுவும் தெரியாமல் செய்வார்கள்

சரணடைய விரும்பும் பலர் தாம் சரணடைந்த செய்தி கேள்விப்பட்டு எம்மை புலிகள் நன்ருகக் கவனிப்பதாக வரும் செய்திகளை அறிந்தால் புலிகளிடம் சரணடையவே விரும்புவர். இயக்கத்திலுள்ள பழைய ஆட்கள் சிலரைத் தவிர ஏனையோர் அங்கிருந்து தப்பிச் செல்லவே விரும்புகிருர்கள்.

நாங்கள் இருவரும் ஒருவருக்கு ஒருவர்பயந்து எப்படி இதனைச் சொல்வது என்று தெரியாத நிலையில் ஒருவாறு கதைத்து, கதைத்து முகாமிலிருந்து தப்பி வந்து புலிகளிடம்சரணடைந்தோம்.

தாம் தப்பிவந்துபுலிகளிடம் சரணடைந்தபோது எம்மை எதுவும் கேட்கவில்லை. நல்ல சாப்பாடு தந்தார்கள். உடுப்புகளும், குளிப்பதற்கு சோப்புகளும் தநது உபசரித்தார்கள். எமமைப் புலிகள் நன்ருகக் கவனித்தார்கள் நாம் வரும்போதுஇருந்த பயம்இப்போது இல்லை. நல்ல சுதந்திரமாக இருக்கிறேம் எமக்கு வேலை வாய்ப்புப் பெற்றுத்தருவதாகவும் உறுதியளித்துள்ளனர். இவர்களுக்கு நாம் என்றும் நன்றிக் கடன்பட்டவர்களாகவே இருப்போம் என்றுர்.

புளொட்டிலிருந்து தான் பட்ட கஷ்டங்கள் பற்றி புலிகளிடம் சரணடைந்த நி. ரஞ்சன் தெரிவிக்கையில்; நானும் இராணுவத்தால் கைதுசெய்யப்பட்டு பின் புளொட்டினரிடம் ஒப்படைக்கப்பட்டு அவர்களுடன் இணைந்து கொண்டேன். இயக்கத்தில் சேர்ந்தால் சம்பளம் தருவதாகவும், வேறு சலுகைகள் வழங்குவதாகவும், வீட்டாருக்குப் பணம் கொடுப்பதாகவும் கூறினர். எனினும் எமது குடும்பத்தவர் பலமைல் தூரத்திலிருந்து எம்மைப் பார்க்க வந்தபோது பஸ் செலவுகூடக் கொடுக்கவில்லை.

இவர்களுடன் 93-ம் ஆண்டு சேர்ந்தேன். இதுகாலவரை அவர்கள் எம்மை அடிமைகள் போன்றே நடாத்திவந்தார்கள். எப்படியாவது இவர்கள் பிடியிலிருந்து தப்பிக்கவேண்டுமென முடிவு செய்தேன். எனினும் தப்பிப்போய் புலிகளிடம் சரணடையவும் பயமாக இருந்தது. தப்பிக்கும்போது பிடிபட்டால் என்ன நடக்கும் என்பது தெரிந்துபயத்துபோயிருந்தேன். என்னைப் போன்றே ரவீந்திரராசாவும் இருந்தார். ஒருவரை ஒருவர் சந்தேகத்துடன் பார்க்கவேண்டிய சூழ்நிலை. காட்டிக்கொடுத்துவிடுவாரோ என்ற பயம். அதே போல்தான் அவரும் இருந்தார். எனினும் எப்படியாவது தப்பித்தான் ஆகவேண்டும் என்ற நிலையில் இருவரும்கதைத்து ஒரு முடிவுக்கு வந்தோம்.

சென்றிக்கு நின்றபோது முகாமை சுற்றி பாதுகாப்பிற்காக போடப்பட்டுள்ள மின்சார வயரில் 'கரன்ட்' குறைவாக வருகிறது எனக்கூறி 'ரெஸ்ரர்' ஒன்றுடன் அதனைப் பார்க்க வந்து ஒருவாறு மின்சார வயரை வெட்டித் தப்பித்துவிட்டோம்.

இயக்கத்திலிருந்து தப்பிக்கும்போதுபிடிபட்டவர்களுக்கு நடந்தகதி எம்மைநடுங்கவைத்தது தப்பித்தவர்களின் பெற்ருேர்கள் மிகக்கொடுமையாக தாக்கப்பட்டதை நாம் நேரில் பார்த்திருக்கிறேம். எனினும் ஒருவாறுதப்பித்துவிட்டோம்.

வவுனியா பகுதியில் இவர்கள் பல அட்டகாசங்களைசெய்தனர். ஒருமுறை பத்துக்கும் மேற்பட்ட பெண்களை பிடித்து வந்து அவர்களைப் பாலியல் வன்முறைக்குட்படுத்தினர். அவர்களில் சிலரை கொன்றுவிட்டார்கள். பலரை மிரட்டி விடுவித்துள்ளனர்.

வவுனியாவில் நகரப்பகுதியில் ஐந்திற்கும் மேற்பட்ட சித்திரவதைமுகாம்கள்உண்டு. 'லக்கி', 'மலர்மாளிகை என பல பெயர்கள் உண்டு. இங்கு பொதுமக்கள். பயணிகள், வர்த்தகர்கள், பெணகள் என பலர் தடுத்துவைக்கப்பட்டு சித்திரவதைக் குள்ளாக்கப்பட்டுள்ளனர்.

மேல்மட்ட புளொட் உறுப்பினர்கள் எம்மை ஒருபொருட்டாகவே கருதுவதில்லை அவர்கள் சகலவசதிகளையும் சலுகைகளையும் அனுபவிப்பார்கள். ஆனல் நாங்கள்ளா பங்கரிலும் சென்றிகளிலும் நித்திரையின்றி பல கஷ்டங்களை அனுபவித்தோம். சரணடைவதை தவிர வேறுவழியற்ற நிலையில் பெருமளவு புளொட் உறுப்பினர்கள் தற்போது உள்ளனர். ஆனல் அவர்களும் எங்கு போய், யாரிடம் சரணடைவது என்று தெரியாமல் உள்ளனர்.

புலிகள் தங்களிடம் சரணடையுமாறு அவர்களுக்கு தெரியப்படுத்திஞல் அவர்களும் அதனைப் பயன்படுத்திச் சரணடைவர். எம்மிடம் புலிகளைப் பற்றி மோசமாகவே பொறுப்பாளர்கள் கூறியுள்ளனர். புலிகளைப்பற்றி ஏதாவது நல்லதைச்சொன்னல் அங்கு சென்றுவிடுவோம்என்பதால்ஒருவரை ஒருவர் சந்திக்கக்கூடவிடமாட்டார்கள். மிரட்டுவார்கள். எனினும் இவர்கள் கூறுவதை எவரும் நம்புவதேயில்லை. அவர்கள் தப்பிஓடுவதையே விரும்புகிருர்கள்.

புளொட்டைப் போன்றே ஏனைய இயக்கங்களும் பொதுமக்களை மிரட்டுவது, அடிப்பது, பணம் பறிப்பது போன்ற செயல்களில் ஈடுபடுகிருர்கள். தமிழ் குழுக்கள் ஒவ்வொன்றிடையேயும் பலத்த மோதல் நிலை உள்ளது. இந்த இயக்கங்களின் செயல்களை மக்கள் வெறுக்கிருர்கள். நாம் எங்கேயாவது போகும் போது மக்கள் எம்மை வெறுப்பகரேவ பார்க்கிருர்கள். பயத்தால் எவரும் எதுவுமே கதைப்பதில்லை. வவுனியாவிலிருந்து புலிகளிடம் சரணடைய தப்பி ஓடிவந்த இரு உறுப்பினர்கள் பிடிபட்டபோது எமது கண் முன்னே சுட்டு அவர்களை அவ்விடத்திலேயே புதைத்து விட்டார்கள். சொல்லப்பட்டவர்களில் ஒருவரது பெயர் ராஜீ திருமலை, மற்றவரது பெயர் சவேந்திரன் (மன்ஞர்)

நாமும் இயக்கத்திலிருந்து தப்பி ஓடி வந்துவிட்டதால் எமது பெற்ருேருக்கும் இவ்வாறு ஏதும் நடக்கலாம். இதனைத் தடுத்து எமது பெற்

(4ம் பக்கம் பார்க்க)

## பலதும் பத்தும்

### தை மாதச் சிந்தனை!

'விசேஷேண வாஹய்தி விவாகம்' எனச் சொல்லப் படுகிறது. அதாவது, இதுவரை தனிமையாக இருந்த ஆண் பெண் இருவரும் புதுப் பொறுப்புடன் தாம் பத்தியத்தை - குடும்பத்தை - சமூகத்தை நடாத்த வேண்டுமென்பது பொருள். அக்கினி சாட்சியாக நடைபெறும் புனிதமான செயல்!

''தெய்வ வாக்கு'' என்னும் நூலில் காஞ்சிப் பெரியார் இப்படிக் கூறியுள்ளார். இன்று - குறிப்பாக மேற்குலகிலே ... உடற்சுகத்திற்கு மாத்திரமே விவாகம் நடப்பதால், குடும்பப் பொறுப்புகளோ, சமுாயப் பொறுப்புகளோ சீரழிந்து வருகின்றன.

சிறிய காரணங்களைக் காட்டி, விவாகரத்துக்களை இலகுவாகவே பெற்றுவிடுகின்றனர். குடும்பப் பொறுப்பே இல்லாதவரிடம் சமுதாயப் பொறுப்புணர்ச்சியை எதிர்பார்க்கலாமா?

அக்கினியல்ல ... எவர் சாட்சியும் இல்லாத விவாதங்களும் சிக்கல் தானும்!

—மயூரன்

## இராசி பலன்

27-1-1995

வெள்ளிக்கிழமை

(தமிழுக்கு தை 13)

ஏகாதசி பி. ப. 12-44 வரை: கேட்டை முன்னிரவு 9-02 வரை மரணயோகம். இராகுகாலம் பகல் 11-06 முதல் 12-36 வரை: சுப வேளை காலை 6-36 முதல் 3-06 வரை:

மேடம்: மனக்கிலேசம், கடும் போக்கு, தொழில் பாதிப்பு

இடபம்: பிரயாசம், தாய்ப் பாசம், காரிய சித்தி

மிதுனம்: தாமதப் பணி, பணக்கஷ்டம், சத்திய வாக்கு

கடகம்: லோப குணம், வாய் ஜாலம், மனச்சுமை

சிங்கம்; சகிக்க முடியாமை, தொழில் நஷ்டம், வெறுப்பு

கன்னி: பிரிய வார்த்தை, அதிகாரம், முயற்சி பலிதம்

துலாம்: துஷ்டர் சகவாசம், நியாயம் பேசுதல், தியானம்

விருச்சிகம்: மித்திரசுகம், இன்ப வார்த்தை, பணப்புழக்கம்

தனுசு: பிறரை தூசித்தல், வீண்பழி, எதிர்பாராத துயர்

மகரம்: பெரியோர் அன்பு, இனிய உறவு, நற்செயல்

கும்பம்: தந்திரோபாயம், சகோதர உதவி, மழலை வார்த்தை

மீனம்: பொல்லாங்கு செய்தல், மனேவிகாரம், அகால உணவு

ஜோஸ்யர்

## வெள்ளி விருந்து

# சிவன் திருக்கோவிலில் வழிபட்டு அருள் பெறலாம்

பொடிகொள் மேனியர் புரியத ளரையினர்
விரிதகு கரத்தேந்தும்
வடிகொள் மூவிலை வேரினர் நூலினர் மறிகடல்
மாதோட்டத்
தடிக ளாதரித் திருந்தகே தீச்சரம் பரிந்தசிந் தையராகி
முடிகள் சாய்த்தடி பேணவல் லார்தம்மேல்
மொய்த்தெழும் வினைபோமே.

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனுர் அருளிய தமிழ் பாமாலைப் பதிகமலர் இது. இரண்டாம் திருமுறை. நட்டராகம் பண்.

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனுர் திருவீழி மிழலையில் இருந்தும் திருத்தோணிபுரத்திற்குச் செல்லத் துணிந்தபோது அன்றிரவு சிவபிரான் கவுணியர்க்கும் கனவிடைமுன் நின்று அருள் செய்கின்ருர்.

''தோணியில் நாமங்கிருந்த வண்ணம் தூமறை வீழிமிழலை தன்னுள் சேணுயர் விண்ணின் றிழிந்த இந்தச் சீர்கொள் விமானத்துக் காட்டுகின்ரேம் பேணும் படியார் அறிதி'' என்று காட்டக் கவுணிய குலதீபர் கண்டு வணங்குகிருர்.

அதேபோலத் திருச்செங்காட்டங் குடித் திருத்தலத்தில் முத்தமிழ் விரகர் வழிபடும்போது சிவபிரான் திருமருகல் அமர்ந்து நிறைந்த திருக்கோலத்தைக் காட்டக் கண்டு தொழுதார்.

பின்னரும்ஆளுடையபிள்ளையார் திருஆலவாயில் திருக்கோவிலில் வணங்கும்போது பாகமும் தேவியை வைத்துக் கொண்டு பைவிரி துத்திப்பரியபேழ்வாய் நாகமும் பூண்ட நள்ளாளுடைய நம்பெருமான் திருக்காட்சியைக் காணப்பெற்ருர்.

கௌரியம்மை சமேத திருக்கேதீச்சுவரப் பெருமானுடைய திருக்கோவிலில் வழிபாடு பூசை விழாக்கள் செய்யும் காட்சியை கண்களால் பருகிக் களித்த அன்பர்கள் அடியார்கள் தொண்டர்கள் சைவப் பெருமக்கள் நித்திய நைமித்திய பூசை வழிபாடு விழாக்கள் குறைவற நிகழும் சிவன் திருக்கோவிலில் சென்று வழிபடலாம், பூசை செய்யலாம். விழா எடுக்கலாம். அக்கோவிலில் அவன் நினைவாகவே அவன்தாள் வணங்கின் நிச்சயமாக அவன் அருள் பெறலாம்.

ஏதவன் ஊர்? ஏதவன்பேர்?
ஆர் உற்ருர்? ஆர் அயலார்?

ஒரு நாமம் ஒருருவம் ஒன்றுமில்லாற்கு ஒரு ஊரையும் ஒரு நாமத்தையும் இட்டு அழைத்தால் அதெந்துவே என்று அருளமாட்டாரா?

''அருளாதிருந்தால்அடிமை செய்யுமவர்க் கெளியை எனும் பேருடையா யெனப் பலரும் பேசுமொழி பழுதாமே.''

மொழி பழுதாகாது பரிந்து வணங்கின் முன்னே வந்து நிற்பன்முன்னைப்பழம்பொருட்டும் முன்னைப்பழம் பொருள்!!

— சிவ சண்முகவடிவேல்

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

1995–01–27

வெள்ளி இரவு

08-01 கலைமஞ்சரி நிகழ்ச்சியில் முதலில் அறிமுகம். அறிமுக மாதுபவை: ''உலக உலா'' ஜனவரி மாத சஞ்சிகை, பொன். கணேசமூர்த்தியின் ''தூரம் தொடு வானம்'' நாவல், அதனையடுத்து சிறு கதை செல்வி எஸ். தர்சினி எழுதிய ''போராளிக்கு அன்புடன் போராளி'' சிறு கதையைத் தொடர்ந்து கவிதை கவிஞர் அ. செ. முருகானந்தம் எழுதிய ''வான் நோக்கும் அகதி''

08-25 கணப்பொழுது— சி. கண்ணம்மா எழுதிய ''கப்டன் பாஸ்கரன்''

08-30 செய்திகள்

08-40 அரசியல் அரங்கம் — வே. பாலகுமாரன் எழுதிய ''நினைவுகள் அழிவதில்லை''

08-50 வாத்திய கானங்கள்

09-00 இரவு நிகழ்ச்சிகள் யாவும் நிறைவு பெறும்.

1995–01–28

சனி காலை

07-02 மாவீரவணக்கம்

07-15 நீங்கள் கேட்டவை

07-30 செய்திகள்

07-35 பத்திரிகைச் செய்திகள்

07-40 நீங்கள் கேட்டவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி

08-00 காலை நிகழ்ச்சிகள் யாவும் நிறைவு பெறும்:

## தமிழ்ழ வானொலி நிகழ்ச்சி நிரல்

1995–01–27

வெள்ளி மாலை

05-01 சிந்தனைச்சிதறல்

05-02 எழுச்சிகீதம்

05-10 புதியவை

05-15 கணநேர காவியங்கள்

05-30 மண்ணின் குரல்

05-40 நேயர் கடிதம்

05-45 தமிழீழ கானங்கள்

06-00 சிந்தனைக்குச் சில விஞடிகள்

06-02 நாடகம் — சங்கீத தாசன் எழுதிய ''நிலையற்ற தூண்கள்''

06-15 விளையாட்டுச் செய்திகள்

06-20 என் தெரிவு

06-30 மாலை நிகழ்ச்சிகள் யாவும் நிறைவு பெறும்.

# அதிகாரிகள் நியமனம் குறித்து பரிசீலனை செய்யும் யாப்பு மன்றம்

(கொழும்பு)

முப்படைத் தளபதிகள் உட்பட முக்கிய அரசாங்க அதிகாரிகளின் நியமனம் தொடர்பாக தராதரங்களைப் பரிசீலனை செய்து ஜனாதிபதிக்குச் சிபார்சு செய்வதற்கென அரசியல் யாப்பு மன்றம் ஒன்றை நிறுவும் வகையில் நகல் அரசியல் யாப்பில் விதிகள் சேர்த்துக்கொள்ளப்படும்.

தற்போதைய அரசியல் யாப்பின் கீழ் இயங்கும் உயர் பதவிக் குழுவுக்குப் பதிலாக நியமிக்கப்பட இருக்கும் இந்த உயர்மட்ட நாடாளுமன்ற அமைப்பு கூடுதலான அதிகாரங்களையும் சுதந்திரத்தையும் கொண்டிருக்கும்.

இந்த உத்தேச அரசியல் யாப்பு மன்றத்தில் சபாநாயகர், பிரதம மந்திரி, எதிர்க்கட்சி தலைவர், சகல மாகாண முதலமைச்சர்களாலும் தெரிவு செய்யப்படும் ஒரு முதல் அமைச்சர் நாடாளுமன்ற தெரிவுக் குழுவினால் நியமிக்கப்படும் ஐந்து நாடாளுமன்ற அங்கத்தவர்கள் உயர் நீதிமன்றம் மேன் முறையீட்டு நீதிமன்றம் ஆகியவற்றைச் சேர்ந்த இரு ஓய்வுபெற்ற நீதிபதிகள் அங்கம் வகிப்பார்கள்.

அரசாங்கசேவை ஆணைக்குழு, லஞ்ச ஊழல் பற்றிய நிரந்தர ஆணைக்குழு அரச கரும மொழிகள் ஆணைக்குழு, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு ஆகியவற்றிற்கான அங்கத்தவர்களை ஜனாதிபதிக்கு சிபார்சு செய்வதே இந்த மன்றத்தினர் கடமையாகவிருக்கும். (கே.ரி)

## பரீட்சை

(யாழ்ப்பாணம்)

தமிழ், ஆங்கில தட்டச்சு, சுருக்கெழுத்து பரீட்சை எதிர்வரும் 30ம் திகதி நடைபெறுமென பரீட்சை ஆணையாளர் அறிவித்துள்ளார்.

சம்பந்தப்பட்ட மாணவர்கள் தமது பகுதித் தலைவரை சந்தித்து தமது அனுமதி அட்டைகளை பெறும்படி யாழ். தொழில் நுட்பக் கல்லூரி அதிபர் க. ஜெயரத்தினம் அறிவித்துள்ளார். 162-இ

## புலிகளின்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கான திகதி குறித்து விடுதலைப் புலிகளிடம் இருந்து பதில் கிடைக்கவில்லையென்றும் பதில் கிடைத்ததும் உத்தேச பேச்சு வார்த்தைக்கான திகதி நிர்ணயிக்கப்படும் என அமைச்சரவைப் பேச்சாளர் தர்மசிறி சேனநாயக்கா தெரிவித்துள்ளார்,

நேற்று முன்தினம் இடம்பெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் இத்தகவலைத் தெரிவித்த அவர் இது சம்பந்தமாக அரசாங்கத்தால் கடிதம் ஒன்று விடுதலைப்புலிகளுக்கு அனுப்பப்பட்டதாக இக்கடிதத்திற்கு விடுதலைப் புலிகளிடம் இருந்து இது வரையில் பதில் கிடைக்கவில்லையென்றும் தெரிவித்தார்.

பேச்சுவார்த்தை என்ற பெயரில் காலத்தைக் கடத்த அரசாங்கம் விரும்பவில்லையென்றும் சாத்தியமான அளவு விரிவான அரசியல் பேச்சுவார்த்தைகளை விடுதலைப்புலிகளுடன நடாத்தவே அரசாங்கம் விரும்புகிறது என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். க-இ

## யுத்த நிறுத்தத்தை

(3ம் பக்கத் தொடர்ச்சி)

ருரைக் காப்பாற்றுமாறு புலிகளிடம் கேட்டுள்ளோம். எமது பெற்றோரை நினைந்து பயமடைகிறோம். நாமும் எமது சொந்த இடத்திற்கு போகமுடியாது போனால் இவர்களால் கொல்லப்பட்டு விடுவோம். நாங்கள் இங்கு தான் இருக்க விரும்புகிறோம்.

வவுனியாவில் 5 முகாம்களில் எம்மைப் போன்று பல பகுதிகளிலும் பிடிக்கப்பட்ட 500 பேர் வரை இயக்க உறுப்பினர்களாகவுள்ளனர் இவர்களில் பழைய உறுப்பினர்களே இராணுவத்துடன் சேர்ந்து தமிழ் மக்களுக்கும், புலிகளுக்கும் எதிரான நடவடிக்கையில் ஈடுபடுவார்கள். எம்மை ஊர்காவல் படை எனக்கூறி பெருமளவு பணத்தினை அரசிடமிருந்து பெறுகின்றபோதும் எமக்கு எதுவித பணமும் தருவதில்லை. ஊர்காவல் படை ஒவ்வொருவருக்கும் நாலாயிரம் ரூபா வரை அரசு வழங்குகிறது.

சில நாட்களுக்கு முன் இராணுவத்திற்கும் புளொட்டிற்கும் இடையில் நடந்த ஒரு பிரச்சினையால் பலரிடமிருந்தும் இராணுவம் ஆயுதங்களை பறித்துவிட்டது, தற்போது சென்றிகளில் இருப்போரிடம் மட்டுமே ஆயுதங்கள் வழங்கப்பட்டுள்ளன. பலர் ஆயுதங்களை மறைத்துவிட்டனர். காடுகளுக்குள் பெருமளவு ஆயுதங்களை புதைத்து வைத்துள்ளனர்.

இப்படியெல்லாம் பல சம்பவங்கள் நடந்துள்ளன. இவற்றையெல்லாம் பார்த்த நாம் பெரும் விரக்தியடைந்திருந்தோம். தற்போது போர் நிறுத்தம் நடைபெறுவதையும் அரசு-புலிகள் பேச்சுக்களையும் புளொட் அமைப்பினர் விரும்பவில்லை. இதை எப்படியாவது குழப்பவேண்டுமென்று கதைப்பார்கள். அதற்கேற்ப நடந்துகொள்ளுமாறும் எம்மை வற்புறுத்துவர். 500 மீற்றர் தூரத்திற்கு அப்பால் புலிகளை கண்டால் சுடக்கூடாது என இராணுவத்தினர் எம்மிடம் கூறுவர்.

ஆனல் எமது இயக்கமோ புலிகளை எங்கு கண்டாலும் சுடுமாறு எங்களுக்கு உத்தரவிட்டார்கள். எப்படியாவது பிரச்சினையை உருவாக்கவே முயல்கிறார்கள். எமக்கு இப்படியெல்லாம் கூறிச் சென்ற அடுத்த நாள் நாம் தப்பி வந்து புலிகளிடம் சரணடைந்துவிட்டோம்.

இங்கு புலிகள் எம்மைநன்கு உபசரித்து கவனித்து வருகிறார்கள். எமக்கு நிச்சயம் மறுவாழ்வு அளிப்பார்கள் என நம்புகிறோம். அதுபோல் அவர்களும் எமக்கு உறுதியளித்துள்ளனர். இங்கு வந்த பின்னர் நாம் சுதந்திரமாக இருக்கிறோம்.

எனவே அங்குள்ள ஏனைய உறுப்பினர்களும் இவர்களின் கொடுமையிலிருந்து தப்பி வந்து புலிகளிடம் சரணடைவதன் மூலம் நாம் தப்பிக்கலாம். மேலும் தமிழ் மக்களின் மத்தியில் துரோகிகள் என பெயர் எடுக்காமல் புலிகளிடம் சரணடைவதன்மூலம் இந்த சுதந்திர போராட்டத்திற்கு தடையாக இருக்காமல் எமது மக்களின் நல்வாழ்விற்காக போரிடும் புலிகளுக்கு ஏதாவதொரு வகையில் உதவி வழங்கவேண்டும் என ஏனைய உறுப்பினர்களுக்கு கூறுவதுடன் பயப்படாமல் அங்கிருந்து வந்து சரணடைந்தால் புலிகள் எம்மையும், எம்மீது குடும்பத்தவர்களையும் காப்பாற்றிவார்கள் என்பது நிச்சயம் எனவும் கூறினர். -சி

## இந்திய

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மேற்பட்டோர் காயமடைந்தனர்.

ஜம்மு-காஷ்மீரில் தனிநாடு கோரிப் போராடும் முஸ்லீம் தீவிரவாதிகளே இக்குண்டு வெடிப்பை நடாத்தியிருக்கலாமெனவும் அறியப்படுகிறது. கே க இ

## சரணடைபவர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பாடு செய்யப்படும் எனவிடுதலைப்புலிகள் தெரிவித்தனர்.

இதற்கான திட்டமொன்றையும் விடுதலைப் புலிகள் நடைமுறைப்படுத்தி வருகிறார்கள், சரணடைந்த பலர் தங்களைப் பகிரங்கப்படுத்த வேண்டாமென்று எம்மிடம் கேட்டுள்ளனர் என்றும் விடுதலைப் புலிகள் தெரிவித்தனர், சிரி

## போர் இடைநிறுத்த

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தலாம் என்று அஞ்சிக்கொண்டிருந்தார்கள் என்றுஅவர்கள் எம்மிடம் தெரிவித்துள்ளனர்

நாங்கள் தம்மை தாக்கிடுவோம் என்ற அச்சத்தால நீண்டநாட்கள் சரணடைய முடியாமலிருந்ததாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

இவ்வாறான மனநிலையிலுள்ளவர்கள் தற்போதைய போர் இடை நிறுத்தத்தை கவனத்தில் எடுத்து சரணடையுமாறு கேட்டுக்கொள்ளுகின்றோம்.

ஏனைய தமிழ்க்குழுக்கள் காலத்திற்குக் காலம் ஏற்பட்டு வருகிற அரசியல் சூழ்நிலைக்கு ஏற்ப அந்தக் குழுக்களின் தலைவர்கள் என்று சொல்லப்படுபவர்கள் தங்களது முடிவுகளை மாற்றிக்கொண்டிருக்கிறார்கள்.

உண்மையாகவே மக்களின் விடிவுக்காகவும், இளைஞர்களை தவறான வழியில் இட்டுச்செல்லும்தமிழ்க்குழுக்களின் சுயநல போக்குகளை வெளிக் கொண்டு வருவதற்காகவும் தமிழ்க் குழுக்களை விட்டு விலகுமாறு அந்தக்குழுக்களிலுள்ள அப்பாவி உறுப்பினர்களை கேட்டுக்கொள்கின்றோம் என்றும் அவர் தெரிவிதார். சிரி இ

## இணக்கம்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சாதாரண விடயமல்ல. இது ஒரு நீண்ட பயிற்சியாகவே இருக்கும் என்பதை மறந்துவிடக்கூடாது என ஜனாதிபதி சந்திரிகா தெரிவித்துள்ளார்.

அண்மையில் கொழும்பில் இடம்பெற்ற வைபவம் ஒன்றில் மேற்கண்டவாறு தெரிவித்த அவர் மேலும் தெரிவிக்கையில் இனநெருக்கடிக்கான தீர்வுகளை காண்பதற்கான முயற்சியின் மத்தியில் ஜனநாயக விரோத செயற்பாடுகள் பல்வேறு ரூபங்களில் தலைகாட்டிய வண்ணம் உள்ளன.

தற்போது தொடரும் மோதல் தவிர்ப்பு ஒப்பந்தம் மற்றும் இணக்கப்பாடுகளும் மக்களின் குரலாக வெளிப்படவேண்டும் என்பதனை அரசியல் கட்சிகளும் வெகுஜன அமைப்புகளும் உணர்ந்து கொள்ளவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்,

இன்றைய சூழ்நிலையில் சமாதானத்திற்கான ஒரே வழி நம்பிக்கை தரக்கூடிய நடைமுறைகளை நம்பிக்கையுடனும் பரஸ்பர இணக்கப்பாட்டுடனும் முன்வைத்து இறுதிவரை நம்பிக்கை தளராது செயற்படுவதுதான் என்பதனை சகல சக்திகளும் உணர்ந்துகொள்ள வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். க-இ

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1995-ம் ஆண்டு ஜனவரி மாதம் 27-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

**Registered as a News Paper at the General Post Office SriLanka under Licence Number B/16336/B-**

# வவுனியா-முல்லைத்தீவுக்கான கண்காணிப்புக்குழு அ'புரத்தில் தரிப்பு

(கொழும்பு)

வவுனியா, முல்லைத்தீவுப் பகுதிகளில் மோதல் தவிர்ப்பு உடன்பாட்டை கண்காணிக்க நியமிக்கப்பட்ட கண்காணிப்புக் குழுவினர் தற்போது அனுராதபுரத்தில் தரித்து நிற்பதாக கொழும்பு செய்திகள் தெரிவிக்கின்றன.

இக்குழுவில்இடம்பெறவுள்ள புலிகள் பிரதிநிதிகள் இன்னும் இக்குழுவினரை சந்திக்கவில்லையென்றும் விரைவில் இச்சந்திப்பு இடம் பெறும் என்றும் அச்செய்திகள் மேலும் தெரிவித்தன.

இந்தக் கண்காணிப்புக் குழுவுக்கு கனடாவைச் சேர்ந்த ஓய்வு பெற்ற இராணுவ அதிகாரி மேஜர் ஜெனரல் கிளெய் மில்லறி தலைமை தாங்குகிறார் எனவும் தெரிவிக்கப்பட்டது- க-இ

# இலங்கையில் இனப்பிரச்னை தீரவேண்டும்

— பேகம் காலிதா ஸியா

(கொழும்பு)

இலங்கையில் நீண்டகாலமாக தொடரும் இனப்பிரச்னை தீர்ந்து இலங்கையில் சமாதானம் நிலவவேண்டும் என்பதனையே பங்களாதேஷ் விரும்புவதாக பங்களாதேஷ் பிரதமரும் சார்க் அமைப்பின் தலைவியுமான பேகம் காலிதா ஸியா தெரிவித்துள்ளார்.

பரஸ்பர பேச்சு வார்த்தை நல்லெண்ணம் என்பவற்றின் மூலம் சமாதான சூழ்நிலை ஏற்பட வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இலங்கை ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க, பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா, எதிர்க்கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோருடன் நடாத்திய சந்திப்பில் மேற்கண்டவாறு தெரிவித்த அவர் தமது இலங்கைக்கான விஜயத்தை முடித்துக்கொண்டு நேற்று தாயகம் திரும்பினார். க இ

# சீன ரொக்கட் வெடித்துச் சிதறியது

(பீக்கிங்)

சீனரொக்கற் ஒன்று நேற்று முன்தினம் விண்வெளிக்கு அனுப்பப்பட்டு சொற்ப வேளையில் நிலத்தில் வீழ்ந்து வெடித்து சிதறியது.

இந்த ரொக்கட்டில் அமெரிக்காவில் உற்பத்தி செய்யப்பட்ட இரண்டு செய்மதிகள் பொருத்தப்பட்டிருந்தன.

இந்த விபத்தினால் ஆசியாவில்தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை ஒளிபரப்பச் செய்ய எதிர்பார்த்திருந்த உலகளாவிய நிறுவனங்களும் சீனாவும் ஏமாற்றமடைந்துள்ளன.

பிரதான ரொக்கற் ஒரு மலையடிவாரத்தில் வீழ்ந்து சிதறியது. செய்மதியும் அதே போல் மற்றுமொரு மலையுடன் மோதிக்கொண்டது.

இந்த செய்மதி மூலம் அதி நவீன தொழில்நுட்ப முறையின தொலைக்காட்சி, தொலைபேசி சேவைகளை ஆசிய கிழக்கு ஐரோப்பிய, வட அமெரிக்கா, அவுஸ்திரேலியா ஆகிய பிரதேசங்களுக்கு வழங்க ஏற்பாடகியிருந்தது.

இந்த நாடுகளிலுள்ள கோடிக்கணக்கான மக்கள் வெவ்வேறு மொழிகளில கலாசாரங்கள் சமூக அம்சங்கள் பற்றிய நிகழ்ச்சிகளைப் பார்க்கக் கூடிய வகையில் இந்த செய்மதி நிர்மாணிக்கப்பட்டிருந்தது. கே-இ

## புளொட் உறுப்பினர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கூடுகள் - 10, 290 ரவைகள் கோல்சர் 2 ஆகியவற்றை புலிகளிடம் ஒப்படைத்துள்ளனர்.

இவ்விருவரையும் நன்கு பராமரித்து வரும் புலிகள் இவ்விருவருக்கும் புனர்வாழ்வழிக்கவும் தகுந்த வேலை வாய்ப்பளிக்கவுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர். சி-இ

## தமிழீழ

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பத்து இடங்களையும், கல்விக் கோட்ட மட்டத்தில் முதல் மூன்று இடங்களையும் பெறும் மாணவர்களுக்கு 500 ரூபாவுக்கான காசு முறியினையும், சிறப்புத் தகைமைச் சான்றிதழ்களையும் வழங்குகின்றது.

தமிழீழப் பொதுக் கல்வித் தேசிய மட்டத்தில் முதல் பத்து இடங்களையும், கோட்ட மட்டத்தில் முதல் இரு இடங்களையும் பெறும் மாணவர்களுக்கு 500 ரூபாவுக்கான காசு முறியினையும், சிறப்புத் தகைமைச் சான்றிதழ்களையும் பேரவை வழங்குகின்றது.

தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேரவையால் கடந்த ஆண்டில் நடத்தப்பட்ட தமிழீழ முதனிலைத்தேர்வு, தமிழீழ இளநிலைத்தேர்வு, தமிழீழப் பொதுக்கல்வித் தேர்வு, ஆகிய மூன்று தேர்வுகளிலும் தேசிய மட்டத்தில் மிகக் கூடிய மொத்தப் புள்ளிகளைப் பெற்று முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களைப் பெறும் மாணாக்கர்களுக்குத் தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேரவை, பேரவை அடையாளங் கொண்ட தங்கம், வெள்ளி, வெண்கலப் பதக்கங்களை வழங்குகின்றது. தமிழீழப் பொதுக் கல்வித் தேர்வில் பரிசு பெறும் மாணவர்களுக்கு பேரவை வெற்றிப் பதக்கங்களையும் வழங்குமென அறிவிக்கப்படுள்ளது.

## பலர் சரணடைய

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சரணடைபவர்கள் எந்த மாவட்டத்திலும் விடுதலைப் புலிகளிடம் சரணடையலாம். அவர்கள் விரும்பிய இடங்களில் சரணடையலாம். ஆயுதங்களுடன் சென்றும் இத்தகையவர்கள் சரணடைய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்று விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளனர். சிரி இ

## ஏமாற்றும் நோக்கம்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஏமாற்றும் நோக்கமோ அல்லது யாரையும் தவறாக பயன்படுத்தும் நோக்கமோ அரசாங்கத்துக்கு கிடையாது''

இவ்வாறு அமைச்சரவைப் பேச்சாளர் தர்மசிறி சேனநாயக்கா பத்திரிகையாளர் மத்தியில் அண்மையில் உரையாற்றுகையில் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்: சமாதானப் பேச்சுவார்த்தை மேற்கொள்வது எமது பலவீனம் என சிலர் கருதுகின்றனர். உண்மைகளை எடுத்துக் கூறுவதனை சிலர் தவறென்று கருதுகின்றனர்.

குறிப்பாக வெகுஜன தொடர்பு துறையிளர் சரியான தகவல்களை மக்களுக்கு வழங்கவேண்டும் எனக்கேட்டுக் கொண்டார். க-இ